பாதகமான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும், குழும முகாமைத்துவ சபை அங்கத்தவர்கள் தளராது செயற்பட்டு, தமது உச்ச உழைப்பை வெளிப்படுத்தியுள்ளனர். DIMO இன் உந்துசக்தி எனது சொந்த, பந்தங்கள் என்பதில் ஐயமில்லை. எம்மை சிறந்த நிறுவனமாக மாற்றுவதற்கு அவர்கள் மேற்கொண்ட அபரிமிதமான உழைப்பை மிகவும் போற்றுகின்றேன்.

மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டு நான் தலைவராக கடமையாற்றியுள்ள காலத்தில் முகங்கொடுத்த மிகவும் சவால்மிக்க ஆண்டுகளில் ஒன்று. இருப்பினும், வளர்ச்சிப் பாதையில் பயணிப்பதற்கு நிறுவனம் இட்டுள்ள வலுவான அத்திவாரத்தின் துணையுடன், எதிர்காலம் சிறப்பாக அமையும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. எம்முன்னே தோன்றுகின்ற வாய்ப்புக்கள் மற்றும் அவற்றை சரியாக பயன்படுத்திக் கொள்வதற்கான எமது திறன் ஆகியவற்றின் அடிப்படையே எனது அதீத நம்பிக்கைக்கான காரணம். குழும வருமானத்திற்கு கணிசமான அளவில் பங்களிக்கின்ற வாகன விற்பனை மற்றும் கட்டுமானத் தொழிற்துறையுடன் தொடர்புபட்ட வணிகப் பிரிவுகள் தற்போது மிகவும் அடிமட்டத்தில் காணப்படுகின்றன. தொடர்ந்து வரும் ஆண்டிலும் இதே நிலைமையே தென்படுகின்றது.

தொடர்ந்து நான்காவது ஆண்டிலும் வாகன இறக்குமதிக்கான கட்டுப்பாடுகள் நிலவியதுடன், கட்டுமானத் தொழிற்துறையும் மந்த நிலையில் காணப்பட்டு, மூலதன உபகரணங்கள் மற்றும் செயற்திட்டங்களுக்கு செலவு செய்வதற்கான ஆர்வமும் மந்தமாகவே இருந்தது. இந்த பின்னடைவுகளுக்கு முகங்கொடுப்பதற்கு இந்த ஆண்டிலே நாம் மிகவும் விவேகத்துடனும், சுறுசுறுப்பாகவும் செயல்பட வேண்டிய தேவை இருந்தது. விவசாயத் துறையானது தொடர்ந்தும் வளர்ச்சிப் பாதையில் பயணித்து, DIMO குழுமத்திற்கு அதிகூடிய வருமானத்தை ஈட்டித்தந்துள்ளதை குறிப்பிட்டே ஆக வேண்டும்.

## நம்பிக்கை ஒளிக்கீற்று

2019 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக புறத்தில் அதிர்ச்சி தரும் ஆண்டுகளுக்கு நாம் முகங்கொடுத்துள்ளோம். அந்த வகையில், பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சி தொடர்பான சமீபத்தைய உறுதிப்பாடுகள் மற்றும் வாகன இறக்குமதிகள் மீளவும் அனுமதிக்கப்படுவதற்கான எதிர்பார்ப்புக்கள் இருள் சூழ்ந்த மேகத்தில் நம்பிக்கை ஒளிக்கீற்றாகத் தென்படுகின்றன. விரைவில் எழும் என எதிர்பார்க்கப்படுகின்ற வாய்ப்புக்களை நம்பிக்கையுடன் எதிர்கொள்ள ஒரு குழுமம் என்ற ரீதியில் நாம் தயாராக உள்ளோம்.

## வாகன இறக்குமதி ஒழுங்குமுறைகளை மீள ஆராய்வதற்கான வாய்ப்பு

வாகன விற்பனைப் பிரிவானது மற்றுமொரு சுழற்சிக்கு வழிகோலி, மீண்டும் இயங்க ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வாகன இறக்குமதியை ஒழுங்குமுறைக்கு உள்ளாக்குவது தேசிய கண்ணோட்டத்தில் மிகவும் முக்கியம். வருமானம் பாதுகாக்கப்பட்டு, சந்தையினுள் பழைய வாகனங்களை கொண்டு வருவதற்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும். ஏனெனில் அதன் பின்னர் எழுகின்ற உதிரிப்பாக இறக்குமதிகளுக்கான தேவை மற்றும் புகை உமிழ்வு நாட்டிற்கு சுமையாக மாறும். வாகன இறக்குமதிகளுக்கு ஆரோக்கியமான வழியில் புதிய ஒழுங்குமுறைகளை விதிப்பதற்கு இது மகத்தானதொரு வாய்ப்பாகும்.

நாட்டின் நாணய ஒழுங்குமுறைகளுக்கு உட்படும் வகையில், வாகனங்களை குத்தகைக்கு விடுகின்ற தரப்பினருக்குத் தேவைப்படுகின்ற ஆரம்ப பங்களிப்பை குறைப்பதையும் வாகன குத்தகை தொழிற்துறை கருத்தில் கொள்ள வேண்டும்.

## வளர்ச்சி மீதான கவனம்

விவசாயம், சுகாதார பராமரிப்பு, உட்கட்டமைப்பு பொறியியல் மற்றும் தற்போது புதுப்பிக்கத்தக்க எரிசக்தி என சமீபத்தில் பல்வேறு துறைகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன், தொழில்நுட்பவியல் தலையீடுகள் அவற்றுக்குத் தேவைப்படுகின்றன. மீளாய்வுக்குட்படும் ஆண்டில் நிறுவன இயங்குதளமொன்றை நிறுவி, இத்தளத்தில் பயன்தரக்கூடிய தொழில்நுட்பங்களை உள்ளிணைப்பதில் நாம் முக்கிய கவனம் செலுத்தினோம். இதற்கு எமக்கு பாரியளவில் வளங்கள் தேவைப்பட்டதுடன், அதன் மூலமாகக் கிடைக்கின்ற வாய்ப்புக்களைக் கருத்தில் கொண்டு, எவ்விதமான தயக்கமுமின்றி வளங்களை ஒதுக்கினோம். DIMO இற்கு எது முக்கியமானது என்பதை உணர்ந்து எனது சொந்த, பந்தங்களும் தேவைப்படும் போதெல்லாம் தோள் கொடுத்தனர். SAP அமுலாக்கத்தின் போது புதிய வணிக முன்மொழிவுகளுக்கு தேவையான ஆற்றலைத் தோற்றுவித்து, தரவு மூலமாக முன்னெடுத்துச் செல்லப்படும் தீர்மானம் இயற்றலுக்கு அனுசரணையளித்து, வணிகத்தை விஸ்தரிக்கும் போது செலவு: பலாபலன் விகிதத்தை மேம்படுத்தும் முகமாக எமது கட்டமைப்பினை மீளவும் சீரமைத்துள்ளோம்.

## மாற்றத்திற்கான பயணம்

ஆரம்பத்திலிருந்தே உலகின் முன்னணி மோட்டார் வாகன வர்த்தகநாமங்களுடனான எமது கூட்டின் காரணமாக DIMO வாகன விற்பனைக்கு புகழ்பெற்றுள்ளது. தற்போது உயர் தீர்வை வரிக் கட்டமைப்புக்கள் மற்றும் இறக்குமதி தடை காணப்படும் நிலையில், வாகன விற்பனைப் பிரிவின் வருமானம் மாற்றமடையலாம் என்பதுடன், முன்னைய மட்டங்களை எட்டுவதற்கான வாய்ப்புக்கள் குறைவு.



வாகன இறக்குமதி நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டவுடன், உடனடியாக பாரிய கேள்வி எழும் என்றும், அதன் பின்னர் சுமாரான நிலைமைக்கு திரும்பும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் இந்த வாய்ப்புக்களை நாம் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளோம்.

இதற்கிடையில், விவசாயப் பிரிவுகள் சீராக வளர்ச்சி கண்டு, குழுமத்தின் வருமானத்திற்கான மிகப் பாரிய பங்களிப்பாளராக மாறியுள்ளன. ஏனைய முதலீடுகளுடன் சேர்ந்து, வாகனம் அல்லாத வருமானங்கள், வாகனம் தொடர்புபட்ட வணிகங்களுடன் ஒப்பிடுகையில் வேகமாக வளர்ச்சி கண்டு வருகின்றன. பல்வகைப்பட்ட ஆபத்துக்களைக் கையிலெடுத்து, எமது ஆபத்தினை பரந்த வகைப்பட்ட துறைகள் மத்தியில் பகிரப்படும் வகையில் மாற்றியமைத்து வருகின்றோம்.

## நிலைபேற்றியல் மீதான அர்ப்பணிப்பு

ஐக்கிய நாடுகள் முன்வைத்துள்ள நிலைபேணத்தகு அபிவிருத்தி இலக்குகளுக்கு (SGDs) பங்களித்து, நிலைபேற்றியல் மீது நாம் அர்ப்பணிப்புடன் உள்ளோம். நிலைபேற்றியலுடன் வெளிவருகின்ற பல வாய்ப்புக்களை நாம் அனுபவித்துள்ளோம். அவ்வாறே, நிலைபேற்றியலைப் பின்பற்றாதவிடத்து அதனால் எழுகின்ற ஆபத்துக்களையும் நாம் அறிவோம். SGDs இற்கு ஆதரவளிக்கும் எமது முயற்சிகளை முன்னெடுத்து, ஆபத்துக்களையும், வாய்ப்புக்களையும் நிர்வகிப்பதற்கு எமது சொந்த நிலைபேற்றியல் நிகழ்ச்சிநிரல் 2030 இனை நாம் ஸ்தாபித்துள்ளோம். எமது முயற்சிகளுக்கு வழிகாட்டுவதற்கு வருடாந்த இலக்குகளையும் இந்த நிகழ்ச்சிநிரல் கொண்டுள்ளது. எமது முயற்சிகளில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்து, நிலைபேற்றியலை அறிக்கையிடுவதில் பல சிறந்த நடைமுறைகளை DIMO கைக்கொண்டுள்ளது. ஒரு படி மேலே சென்று, நிலைபேற்றியல் தொடர்புபட்ட வெளிப்படுத்தல்கள் அடங்கலாக, எமது நிதி அல்லாத புள்ளி விபரங்களில் சுயாதீன கணக்காய்வாளர்களின் உத்தரவாதத்தைப் பெற்றுக்கொள்ளும் முயற்சிகளையும் முன்னெடுத்துள்ளோம்.

## சார்ந்திருப்பதால் எழுகின்ற ஆபத்துக்களைக் குறைத்தல்

வர்த்தகநாமங்களின் உரித்தாளர்களான எமது முதன்மையாளர்களுடன் மதிப்புமிக்க உறவுமுறைகளை காலம் காலமாக கட்டியெழுப்பி, DIMO பாரம்பரியமாக மிகச் சிறந்த வர்த்தகநாமங்களுடன் கூட்டுச் சேர்ந்து வந்துள்ளது. காலச்சக்கரத்தில் இந்த உறவுமுறைகள் நாம் இன்று இந்த ஸ்தானத்தில் திகழ்வதற்கு DIMO இற்கு மகத்தாக உதவியுள்ளன. அதே நேரம், DIMO இன் வணிகங்களில் பெரும்பாலானவை, அரசாங்க கொள்கை, தீர்வை வரிகள், ஒழுங்குமுறைகள், வட்டி வீதங்கள் மற்றும் காலநிலை வெளிக்காரணிகளில் பெருமளவு தங்கியுள்ளன. இத்தகைய சார்புநிலை பொதுவாக பல வணிகங்களுக்கும் பொருந்தும். அத்தகைய சார்புநிலைகளால் எழுகின்ற ஆபத்துக்களை நிர்வகிக்கும் நோக்குடன், பல துறைகளுக்கும் விஸ்தரிப்பதை நாம் தற்போது ஆரம்பித்துள்ளதுடன், புதிய சார்புநிலைகள் தற்போதையவற்றிலிருந்து வேறுபட்டிருக்கும்.

விவசாயத் துறையில் நாம் கால்பதித்தது அதற்கான சிறந்த உதாரணம். புதிய வணிக துறைகள் மற்றும் உற்பத்தி, ஏற்றுமதிகள் போன்ற வேறுபட்ட மதிப்புச் சங்கிலிகளில் எமது முயற்சிகளை நாம் தொடருவோம். புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, கல்வி மற்றும் உணவுத் தொழிற்துறை ஆகியன தற்போது எமது கவனத்தையும், ஆர்வத்தையும் ஈர்த்துள்ள துறைகளாகும்.

## முதலீடுகளிலிருந்து வருமானம்

சமீபத்தில் நாம் கால்பதித்துள்ள புதிய வணிக முயற்சிகளை உருவாக்கம், விஸ்தரிப்பு, முதிர்ச்சி காணுதல் மற்றும் சந்தை ஆதிக்கம் போன்ற கட்டங்களாக வகுத்துள்ளோம். ஒரு சிலவே முதிர்ச்சி அல்லது 'சந்தை ஆதிக்கம்' என்ற ஸ்தானத்தை எட்டியுள்ளமை வெளிப்படை. Plant Chem மற்றும் Plant Seeds ஆகிய வணிகங்கள் ஆறு ஆண்டுகளுக்கு முன்பு கொள்முதல் செய்யப்பட்டிருந்த நிலையில், தற்போது அவை சந்தை ஆதிக்கம் கொண்டவையாக மாறியுள்ளன. ஏனையவை குறைந்தபட்சம் முதிர்ச்சி கட்டத்தை எட்டும் வரையாவது வளங்கள் மற்றும் இலாபமட்டத்தில் அழுத்தம் கொண்டவையாகவே காணப்படும். தற்போது எமது புதிய வணிக முயற்சிகளை சுகாதாரப் பராமரிப்பு, ஏற்றுமதிகள் மற்றும் விவசாயம் ஆகியவற்றை முதிர்ச்சி கட்டத்திற்கு மேம்படுத்துவதில் நாம் விவேகமான வழியில் கவனம் செலுத்தியுள்ளோம்.

## பங்குதாரர் வருமானம்

நான் விளக்கியவாறு, பல்வகைப்படுத்தல் மற்றும் விஸ்தரிப்பிற்கான தயார்நிலை மூலமாக வலுவான அத்திவாரத்தை இடுவதற்கு DIMO ஆல் முடிந்துள்ளது. இதற்கு கணிசமான அளவில் முதலீடு தேவைப்பட்டது, பாதகமான ஒரு காலகட்டத்தில் இது தேவைப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இது அண்மைய காலங்களில் பங்குஇலாப வருமானங்களைக் குறைத்துள்ளது. இந்த முதலீடுகள் இடை மற்றும் நீண்ட கால அடிப்படையில் கூடுதல் மதிப்பை வழங்கும் என்ற நம்பிக்கையுடன் தொடர்ந்தும் புரிந்துணர்வுடன் ஒத்துழைக்கின்ற பங்குதாரர்களுக்கு நான் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

## பணிப்பாளர் சபை

பல்வேறு துறைகளில் பாண்டித்தியம் பெற்ற பணியாளர்களைக் கொண்ட சிறந்த சபையொன்றைக் கொண்டிருப்பது எனக்கு கிடைத்த அதிர்ஷ்டம். சமீப காலங்களில் ஒரு நிறுவனமாக நாம் முகங்கொடுக்க நேரிட்ட வெளிப்புற அதிர்ச்சிகளுக்கு மத்தியில், நிறுவனத்தை நிர்வகித்து, சரியான திசையில் வழிகாட்டுவதில் அவர்களது தொடர்ச்சியான அர்ப்பணிப்புக்கு நான் நன்றி தெரிவிக்கின்றேன்.

பங்குச்சந்தையில் நிரற்படுத்தப்படுவது தொடர்பில் கடந்த ஆண்டு விநியோகிக்கப்பட்ட விதிமுறைகளின்படி இந்த ஆண்டின் பிற்பகுதியில் சபையில் மாற்றங்கள் தேவைப்படுவதுடன், சபை மற்றும் நியமனச் சபை ஆகியன இணைந்து குறித்த நேரத்தில் இத்தேவையை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

குழும முகாமைத்துவப் பணிப்பாளராக நான் வகித்து வந்த பதவிக்கு, 2023 செப்டெம்பர் 01 முதல் அமுலுக்கு வரும் வகையில் திரு. கஹநாத் பண்டிதகே அவர்களை நியமித்தமை இந்த நிதியாண்டில் இடம்பெற்ற முக்கியமானதொரு மாற்றம். அவர் தற்போது குழும முகாமைத்துவப் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். திரு. கஹநாத் பண்டிதகே அவர்கள் DIMO நிறுவனத்தில் 38 ஆண்டுகள் அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன், பல்வேறு துறைகளில் பல்வேறு முக்கிய பதவிகளை அவர் வகித்துள்ளார்.

## முன்னோக்கிய பயணம்

முன்னோக்கிய ஆண்டில் விசேட கவனத்தைப் பெற்றுக்கொள்ளும் மூன்று துறைகளை நான் இனங்காண விரும்புகின்றேன். முதலாவதாக, தற்போது வரையில் நாம் கொள்முதல் செய்துள்ள மற்றும் முதலீடு மேற்கொண்டுள்ள வணிகச் செயற்பாடுகளை விஸ்தரித்து, இந்த ஆண்டில் சந்தை ஆதிக்க மட்டத்தை எட்டுவது, அல்லது குறைந்தபட்சம் முதிர்ச்சி மட்டத்தையாவது எட்டுவதாகும். இரண்டாவதாக, நாம் உயர் வருமான வளர்ச்சி வீதத்தை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். மூன்றாவதாக, நிறுவன வள முகாமைத்துவத் தளத்தில் மேலதிக அம்சங்களைச் சேர்ப்பித்து, பின்நிலை பணிகளின் தொழில்நுட்ப ஆற்றலை விரிவுபடுத்துவதற்கு திட்டமிட்டுள்ளோம்.

## நன்றி பாராட்டுதல்

இந்த அளவுக்கு வெளிப்புற அதிர்ச்சிகள் மற்றும் நாம் கணிசமான முதலீடுகளை மேற்கொண்ட ஒரு வணிகப் பிரிவை நேரடியாக பாதித்துள்ள பல ஆண்டுகளாக நீடிக்கின்ற வாகன இறக்குமதிகளுக்கான தடை ஆகியவற்றுக்கு மத்தியில் கடினமான காலங்களில் முன்னோக்கிச் செல்வதென்பது எந்த வகையிலும் இலகுவான ஒரு காரியமல்ல. பாதகமான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும், குழும முகாமைத்துவ சபை அங்கத்தவர்கள் தளராது செயற்பட்டு, தமது உச்ச உழைப்பை வெளிப்படுத்தியுள்ளனர். DIMO இன் உந்துசக்தி எனது சொந்த, பந்தங்கள் என்பதில் ஐயமில்லை. எம்மை சிறந்த நிறுவனமாக மாற்றுவதற்கு அவர்கள் மேற்கொண்ட அபரிமிதமான உழைப்பை மிகவும் போற்றுகின்றேன்.

பல வெளிநாட்டு முதன்மையாளர்களின் அங்கீகாரம் மற்றும் மரியாதையை நாம் எப்போதும் அனுபவித்து மகிழ்ந்துள்ளதுடன், அவர்களுடைய மிகச் சிறந்த வர்த்தகநாமங்கள் எமது சொந்த வர்த்தகநாம மதிப்பை கட்டியெழுப்புவதற்கு DIMO க்கு மகத்தான வகையில் உதவியுள்ளன. உண்மையில், DIMO இன் பயணத்தில் பலத்திற்கான பிரதான ஆதாரமாகவே அவை திகழ்ந்துள்ளன.

இறுதியாக, DIMO நிறுவனத்தை இன்று இந்த ஸ்தானத்திற்கு கட்டியெழுப்புவதற்கு பங்களித்துள்ள எமது வாடிக்கையாளர்கள், வங்கியாளர்கள் மற்றும் தொடர்புபட்ட அனைத்து தரப்பினருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ரஞ்சித் பண்டிதகே
தலைவர்

18 ஜூன் 2024
கொழும்பு